தேதி.01.09.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 5/2015 திரு.ராமசாமி, த/பெ.மாரப்பகவுடர் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு எது சொந்த ஊர் என்றால் ஊட்டி. எனது உறவினர்கள் எல்லாம் ஊட்டியில் தான் வசித்து வருகிறார்கள். நான் நிரந்தரமாக ஊட்டியில் தான் வசித்து வருகிறேன். 2ம் பிரதிவாதி சுரேஷ் எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 40 வருடத்திற்கு முன்னர் இருந்து தெரியும். எவ்வாறு அவருடன் எனக்கு பழக்கம் என்றால் 2ம் பிரதிவாதியின் தந்தையுடன் வியாபார ரீதியாக பழக்கம் அவ்வாறு 2ம் பிரதிவாதியுடனும் பழக்கம் ஏற்பட்டது. எந்த சர்வே எண்ணில் எத்தனை ஏக்கருக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 558/1, 558/2 ஆகிய எண்களில் 30 ஏக்கருக்கு மேல் உள்ளது அதில் நான் 11 ஏக்கர் பூமியை வாங்கியுள்ளேன். நான் வாங்கியதாக சொல்லப்படும் 11 ஏக்கர் பூமியில் சர்வே எண். 558/1 எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றும், சர்வே எண். 558/2 எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் எவ்வளவு என்று தெரியாது. நான் வாங்கியதாக சொல்லப்படும் 11 ஏக்கர் பூமியின் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் வாங்கியதாக சொல்லும் 11 ஏக்கர் பூமியை எப்போது வாங்கினேன் என்றால் 2000ம் வருடம் 2ம் பிரதிவாதி சுரேஷிடம் இருந்து வாங்கினேன். அந்த 11 ஏக்கர் பூமி 2ம் பிரதிவாதி சுரேஷிற்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் முறையில் விவசாயம் செய்து வந்த பூமியை நான் வாங்கினேன். 2ம்

பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் போடும்போது நான் சென்றேனா என்றால் சென்றேன். அந்த கிரைய ஒப்பந்த தேதி தெரியுமா என்றால் தேதி, மாதம் தெரியாது. 1998ல் கிரைய ஒப்பந்தம்போடப்பட்டது. எங்கு வைத்து கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி சாரதாம்மாள் வீட்டில் வைத்து போடப்பட்டது. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் 4ம் பிரதிவாதியின் அப்பா மற்றும் நாகேந்திரன் ஆகியோர் உடன் இருந்தார்கள். நாகேந்திரன் யார் என்றால் கேர்மாளா பூமியில் வசித்து வருகிறார். அவர் கிரைய ஒப்பந்தத்திற்கு முன்னர் சுமார் ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்பு தெரிந்தவர். நான் கிரைய ஒப்பந்தத்தின் சமயத்தில் உடன் இருந்ததாக சொல்லும் பட்சத்தில் நான் அதில் கையெழுத்து ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கிற்காக வா.சா.ஆ.1ஆன கிரைய ஒப்பந்தம் தயார் செய்யும்போது உடன் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 ஆன அசல் கிரைய ஒப்பந்த பத்திரத்தை யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதி தான்கொடுத்தார். அதிலுள்ள வாசகங்களை படித்துப்பார்த்தேனா என்றால் 1999ம் ஆண்டிலேயே படித்துப்பார்த்துவிட்டேன். என்னிடம் எப்போது கொடுத்தார் என்றால் 2000ம் ஆண்டு கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விவரத்தில் விஸ்தீர்ணம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேலும் அதில் காலை எண்.558/1, 558/2 என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–1ன் படி அதில் 2ம் பிரதிவாதிக்கு பூமியை கொடுத்ததாக சொல்லப்படும் வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு காலைகளிலும் மொத்தமாக 30 ஏக்கர் உள்ளது

என்று வா.சா.ஆ–1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதனால் எந்த 11 ஏக்கருக்கு வா.சா.ஆ.1ஆன ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று சொல்லமுடியாது என்றால் வாய்மொழியாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை. மேற்சொன்ன வாய்மொழியாக சொல்லப்படும் சங்கதிகளை எனது வா.சா.ஆ.5ஆன வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ, பிராமண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திற்கு பின்னர் 2ம் பிரதிவாதி சொத்தை சுவாதீனத்திற்கு எடுத்து ஓட்டி வந்ததாக சொல்லும் நிலையில் 2ம் பிரதிவாதி எப்போது சுவாதீனம் எடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் கிரையம் ஒப்பந்தம் செய்து ஒரிரு மாதம் கழித்து எடுத்திருக்கலாம். 2ம் பிரதிவாதி எந்த தேதியில் சுவாதீனம் எடுத்தார் என்று குறிப்பிட்டு தெரியுமா என்றால் இல்லை. அதேபோல் 2ம் பிரதிவாதி சுவாதீனத்தை எடுத்துவிட்டார் என்ற விவரத்தை நான் எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியிடமிருந்து நான் எப்போது சுவாதீனத்தில் எடுத்தேன் என்றால் 2000ம் வருடம் எடுத்தேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. எனக்கு சுவாதீனம் கொடுப்பதற்கு முன்னர் 2ம் பிரதிவாதி சுரேஷ் தான் ஓட்டி வந்தார் என்று நான் சொல்வது சரியா என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்திற்கு பின்னர் 2ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்துவந்தார் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் 2ம் பிரதிவாதியிடமிருந்து நான் சுவாதீனம் பெற்று நான் அனுபவித்து வந்தேன் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணத்திற்கு பின்னிட்டு மீதி கிரையத்தொகையை சில தவணைகளில் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியிடம்

கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அவர் எந்த தேதியில் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் 1998 மற்றும் 1999 என்று மட்டும் தெரியும் தேதி நினைவில் இல்லை. 2ம் பிரதிவாதி யார் முன்னிலையில் எங்கு வைத்து 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு ஒவ்வொரு முறையும் பணம் கொடுக்கும்போது நான் உடன் சென்றேனா என்றால் ஒப்பந்தத்துடன் சேர்த்து மூன்று முறை சென்றேன். ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு முதல் முறை 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.50,000/–ம் கொடுத்தார். யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது என்று வா.சா.ஆ.1ல் காணப்படவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு இரண்டாவது முறை 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் 1ம்பிரதிவாதி வாங்கிய கடன் எல்லாம் சேர்த்து ரூ.1,50,000/–ம் கொடுத்தார். அந்த தேதியில் எவ்வளவு கடன் இருந்தது என்றும், எவ்வளவு கடன் 2ம் பிரதிவாதி செலுத்தினார் என்றும், மீதி ரொக்கம் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் கடன் மொத்தமாக ரூ.1,12,000/–ம் இருந்தது. அதில் ரூ.12,000/–ம் பயிர் கடனுக்காக கூட்டுறவு வங்கியில் செலுத்தப்பட்டது. சென்னையை சேர்ந்த வில்சன் என்பவருக்கு ரூ.50,000/–, கேர்மாளாவை சேர்ந்த ஜெய்சிங் என்பவருக்கு ரூ.50,000/–ம் 2ம் பிரதிவாதி கொடுத்துள்ளார். எந்த எந்த தேதியில் 2ம் பிரதிவாதி கடனை செலுத்தியுள்ளார். என்று தெரியுமா என்றால் தேதி நினைவில் இல்லை. 1999ம் வருடம் செலுத்தியுள்ளார். வா.சா.ஆ.1ல் மேற்சொன்ன விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதனால் நான் சொல்வது போல்

வா.சா.ஆ.1ன் பின்புறத்தில் உள்ள குறிப்புகளின்படி 2ம் பிரதிவாதி, 1ம்பிரதிவாதிக்கு தொகைகள் செலுத்தி வரவு வைத்து கொடுத்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றும், வழக்கிற்காக நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வா.சா.ஆ.1ல் உள்ள பின்புற குறிப்புகள் மோசடியாக எழுதியுள்ளோம் என்றும், அதில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்து என்று சொல்லப்படும் கையெழுத்து 1ம் பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் மோசடியாக தயார் செய்து கையெழுத்து செய்தது என்றால் சரியல்ல. மேலும் வா.சா.ஆ.1ல் இரண்டாவது குறிப்பின் கீழ்உள்ள கொங்கு வீரப்பன் என்ற கையெழுத்து 4ம் பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தின் படி 2ம் பிரதிவாதி சுரேஷ், 1ம் பிரதிவாதிக்கு ஒப்பந்தத்தின் பின்புறம் உள்ள குறிப்புகளின் படி தொகை எதுவும் தரவில்லை என்றும், வழக்கிற்காக நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து குறிப்புகள் மோசடியாக எழுதியுள்ளோம் என்றும், அதில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியின் கையெழுத்து மோசடியாக போட்டு மேற்படி ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள மூன்றாவது குறிப்பில் 2ம் பிரதிவாதி, என் பெயருக்கு வா.சா.ஆ–1ன் கிரைய ஒப்பந்ததை மாற்றி கொடுத்துவிட்டதாக உள்ள குறிப்பின் தேதி தெரியுமா என்றால் 2000ம் வருடம் என்று தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. வா.சா.ஆ–1ல் உள்ள மூன்றாவது குறிப்பை யார் எழுதினார்கள் என்றால் பஞ்சயத்தார்கள் பத்து பேர் கூடியிருந்தார்கள் அதில் யார் எழுதினார் என்று தெரியாது. பஞ்சயத்தார்கள் பத்து பேர் இருந்ததாக சொல்லும்பட்சத்தில் அதில் யாரேனும் ஒருவரிடம் சாட்சி கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. 3ம் குறிப்பானது வழக்கிற்காக 2ம் பிரதிவாதியும்,

நானும் சேர்ந்து மோசடியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. பஞ்சயத்தார் வேறொரு ஆவணத்தில் அனைவரும் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் அந்த ஆவணமும் 3வது குறிப்பு எழுதப்பட்ட தேதியில் தான் எழுதப்பட்டதா என்றால் ஆமாம் மேற்படி பஞ்சயத்தார் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3வது குறிப்பு எழுதும்போது 1ம் பிரதிவாதி சாராதாம்மாள் அங்கு இருந்தாரா என்றால் இல்லை. மேற்சொன்ன விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகள், சொத்துவிவரங்கள் ஆகியவற்றை நான் எனது வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால்நான் தான் கூறினேன். வா.சா.ஆ.1ல் உள்ள சொல்லப்பட்டுள்ள சொத்து விவரத்தை தான் வா.சா.ஆ.5ல் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்டும் வா.சா.ஆ.5ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்து விவரத்தின் காலை எண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்தின் விஸ்தீர்ணம், பழைய சர்வே எண் ஆகியவை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் வழக்கறிஞர் அறிவிப்பில் காணப்பட்டுள்ள சொத்துவிவரத்தில் காலை எண்.558/1, 558/2 ஆகிய காலைகளுக்குரிய முழு விஸ்தீர்ணம் பூராவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது மொத்தமாக சேர்த்தால் 31.25 3/4 ஏக்கர் உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் மேட்டுப்பாளையத்தை சேர்ந்தவர். வழக்கறிஞர்

அறிவிப்பும் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த வழக்கறிஞரை வைத்து தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.5 அறிவிப்பை நான் கொடுக்கவில்லை என்றும், 2ம் பிரதிவாதி தான் அவர் ஊரைச்சேர்ந்த வழக்கறிஞரை நியமித்து அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சுரேஷ் எனக்கு சுவாதீனம் கொடுத்ததாக சொல்லப்படும் 2000ம் ஆண்டிற்கு முன்னர் எனக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கூட்டுறவு வங்கிக்கு கடன் செலுத்தியதாக தாக்கல் செய்துள்ள வா.சாஆ.2 இரசீதுகள் எப்போது செலுத்தப்பட்டது என்றால் 1999ம் வருடம் நான் தான் செலுத்தினேன். நான் 2000ம் வருடம் சுவாதீனம் பெற்றதாக சொல்லும் பட்சத்தில் 1999ம் வருடம் செலுத்தியதாக சொல்லப்படும் வா.சா.ஆ–2 ஆன ரசீதுகள் உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ–3 ஆன துணை ஒப்பந்தம் யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதி சாரதாம்மாள் எனக்கு அவர் வீட்டில் வைத்து எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ3க்கு உண்டான முத்திரைத்தாள்களை யார் வாங்கினார்கள் என்றால் நான் தான் வாங்கினேன். எத்தனை நாட்களுக்கு முன்னர் வாங்கினேன் என்றால் வா.சா.ஆ.3 தயார் செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மேட்டுப்பாளையத்தில் வைத்து வாங்கினேன். வா.சா.ஆ.3ஐ யார் எழுதினார்கள் என்றால் ஊட்டியைச்சார்ந்த கிரியைகவுடர் என்பவர் எழுதினார். அவரை யார் கூட்டிச்சென்றேனா என்றால் இல்லை. சாரதாம்மாள் அழைத்து வந்தார். வா.சா.ஆ.3ஐ எழுதிய தேதியில் கிரியைகவுடரை எப்போது பார்த்தேன் என்றால் 1ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து பார்த்தேன். கிரியைகவுடரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்

வழக்கறிஞர் என்பதால் தெரியும். வா.சா.ஆ.3ஆன ஆவணமானது 1ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டிருக்க முடியாது என்றும், அவர் அப்போது சத்தியமங்கலத்தில் இருந்து வந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ3ல் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் கேர்மேளாத்தை சேர்ந்த பழனிச்சாமி கையெழுத்து செய்துள்ளார். அவர் எனக்கு எப்படி தெரியும் என்றால் தூரத்து சொந்தம். என் மூத்த அக்காவின் பெயர் என்றால் லட்சுமி. லட்சுமியின் மகன் தான் பழனிச்சாமி என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் மற்றொரு சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் குமார் என்பவர் செய்தார். அவர் மேட்டுப்பாளையத்தை சேர்ந்தவர். அவர் எவ்வாறு பழக்கம் என்றால் பழக்கம் இல்லை. கிரியகவுடருடன் வந்திருந்தார். நான் சொல்வது எல்லாம் பொய் என்றும் ,வா.சா.ஆ.3ஆனது 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அதில் 1ம் பிரதிவாதியின் கையொப்பமாக செய்யப்பட்டுள்ளது 1ம் பிரதிவாதியின் கையொப்பங்கள் அல்ல என்றும், நானும், 2ம் பிரதிவாதியும், என்னுடைய அக்கா மகன் பழனிச்சாமி, கிரியகவுடர், மற்றொரு சாட்சியான சிவக்குமார் ஆகியோர் கூட்டுசேர்ந்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு வா.சா.ஆ3 ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றும், வா.சா.ஆ–1 ஆவணத்தில் உள்ள குறிப்புகள் மற்றும் வா.சா.ஆ.3 ஆவணம் ஆகியவை 2ம் பிரதிவாதியால் மோசடியாக தயாரிக்கப்பட்டு எனது பெயரில் மோசடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு

சொத்தில் நானோ, 2ம் பிரதிவாதியோ எப்போதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், 1ம் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் இருந்து வந்து கடந்த 23.12.2002ம் தேதியில் 3, 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்து உள்ளிட்ட பல சொத்துக்களை தானமாக கொடுத்து அன்றிருந்து 3, 4 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.